பதிவு எண்: M. 6311 ★ தோற்றம்: 5131 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்.பி.

தொகுதி: 15] சென்னை: ஆனி 24ஆ (8—7—67) சனி ★ வெளியூர்: ஆனி 25ஆ (9—7—67) ஞாயிறு [இதழ்: 21

குடிசைவாழ் மக்களுக்கு வாழ்வளிப்போம்

கொடுமைக்குள்ளாவதை நிரந்தரமாகத் தடுப்போம்

கயமைச் செயலில் எவர் ஈடுபடினும் சட்டம் தனது பணியைச் செய்தே தீரும்

சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணு தெளிவுரை

சென்னை, சூலை 8—

"இந்த ஐந்தாண்டுக் காலத்துக்குள், ரூ. 1 கோடி அளவுக்கு நிதி திரட்டி, 'சேரி' என்று சொல்லப்படும் பகுதிகளிலும் 'குடிசைப் பகுதி' என்று சொல்லப்படும் பகுதிகளிலும் வாழும் மக்கள் கொடுமைகளுக்கு ஆட்படாமல் நிரந்தரமாகத் தடுக்க—அந்த இடங்களை மாற்றியமைத்திடும் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு மிக்க ஆர்வம் கொண்டுள்ளது. இந்த ஆர்வத்தை அதிகப்படுத்தும் வகையில், பொதுமக்களுடைய தொடர்பு கொண்ட எல்லோரும்—எல்லா அரசியல் கட்சியினரும்—எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களும்—மாநகராட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"இங்குள்ள குடிசைவாழ் மக்கள் தீ விபத்தாலும் வெள்ள ஆபத்தாலும் பாதிக்கப்பட்டு, வாழ்விழந்து மகிழ்ச்சி இன்றி அல்லலுற்றுக்கொண்டிருப்பதையும், பெண்டிரும் பிள்ளைகுட்டிகளுடன் வதைபடுவதையும் எப்படியும் நிக்கியாக வேண்டும் — போக்கியாக வேண்டும்; இதில் எந்தவித அரசியலும் தலையிடுவதை இந்த அரசு விரும்பவில்லை — அனுமதிக்காது.

"காலித்தனத்திலும், கயமைச் செயலிலும், தாக்குதலிலும், யார் ஈடுபட்டாலும், ஒரு துளியும் தயவு தாட்சண்யமின்றி, சட்டம் தனது வேலையைச் செய்யும்; 'யாரோ அப்படிச் செய்கிறார்கள்' என்று பார்த்துக்கொண்டு சும்மாயிருந்துவிட முடியாது!

"யாரும்—யாரையும்—'யாரோ' என்றும் எண்ணத் தேவையில்லை! ஐயப்பாட்டையும் பீதியையும் பயன்படுத்திக்கொண்டு கலவரங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளை தடுத்து நிறுத்துவதிலே தயக்கம் காட்டத் தேவையில்லை" என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், இன்று சட்டமன்றத்தில் திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

சென்னையில் தொடர்ந்து நடந்துவந்திருக்கும் தீ விபத்துக்கள் குறித்தும், அவை தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும், சட்டமன்றத்தின் 82-வது விதிக்கிணங்க முதலமைச்சர் அண்ணு அவர்கள், கேள்வி நேரம் முடிந்ததும், ஒரு விளக்கவுரையாற்றினார்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும், அவர்களுக்கு நிரந்தரப் பரிகாரம் அளிப்பதற்கான ஏற்பாடும் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டவட்டமான நடவடிக்கைகளும் அண்ணு அவர்களால் அறிவிக்கப்பட்டன.

அதே நேரத்தில், காலித்தனத்தில் ஈடுபடும் சமூக விரோதிகட்குக் கடுமையான எச்சரிக்கையும், பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்ற உருக்கமான வேண்டுகோளும், இந்த அரசு எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினையில் சுறுசுறுப்பாக அக்கறைகாட்டிச் செயல்படுகிறது — செயல்படும் என்ற உறுதிப்பாடும் அந்த உரையில் அமைந்திருந்தன.

அண்ணு அவர்கள் தமது உரையில் கூறியதாவது :—

"நகரில்—ஆறு-ஏழு நாட்களாகத் தொடர்ந்து ஏற்பட்டு வந்த தீ விபத்துக்கள் பெரும் அளவுக்குக் கட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

முதலில் இரண்டு நாட்கள் பல வேறுவிதமான பீதிகள் ஏற்பட்டது உண்மை; தற்போது அந்தப் பீதிகள் குறைந்து, விபத்துக்களின் தன்மையும் குறைந்துள்ளன.

தொடர்ந்து கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக, விபத்தின் கடுமையைக் குறைக்க முடிந்திருக்கிறது—இந்த வகையில், நடவடிக்கை வெற்றிகரமான பலனைத் தந்துள்ளது.

துவக்கத்தில் நாமு—இரு நூறு என்ற எண்ணிக்கையில் குடிசைகள் தீப்பற்றிப் பெருஞ் சேதம் ஏற்பட்டன.

இப்போது ஏற்படும் தீவிபத்துக்கள், உடனடியாக அணைக்கப்படுவதாலும், தக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாலும் சேதம் அதிகம் ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது.

ஆனால் தீவிபத்துக்களே ஏற்படாமல் முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்லவில்லை; பீதி அடியோடு போய்விட்டதாகச் சொல்லவில்லை!

"பாதிக்கப்பட்ட மக்கள் பலவேறு கொடுமைகளுக்காளாகிக் கண்ணீரில் நிற்கின்றனர். மற்றும் முள்ள குடிசைவாழ் மக்கள், 'நம் விடும் நக்கையாகிவிடுமோ!' என்ற அச்சத்தால்—பீதியால்—வீட்டிற்குள் பதுங்குவுக முடியாமல் விதியே வாழ்க்கை நடத்துகின்றனர்! 'ஆபத்து எந்த நேரத்தில் வருமோ' என அஞ்சி, பாதை ஓரத்தில் காத்திருக்கும் நெஞ்சு சுருங்கும் நிலைமைகளைக் காண்கிறோம்!

தற்போது, போலீசாரும், ஊர்க் காவல் படையினரும், பெரும் அளவுக்குக் காவல் புரிந்து வருகிறார்கள்—சந்தேகத்துக்குள்ளாவோரைக் கைது செய்கிறார்கள்—பீதிகொண்டுள்ள மக்களுக்கு ஆறுதல் கூறுகிறார்கள்—உயர் தரப் போலீஸ் அதிகாரிகளும் அடிக்கடி குடிசைப் பகுதிகளுக்குச் சென்று கண்காணித்து வருகிறார்கள்—பொதுத் தொண்டாற்றுவோரும் ஆறுதல் கூறி வருகிறார்கள்.

மாநகராட்சியைச் சேர்ந்த எல்லா பள்ளிகளும் விடிழந்த மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளன. அப்பள்ளிகளுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு விடுமுறை யளிக்கப்பட்டுள்ளது.

வீடிழந்தமக்கள் தங்கியிருப்பதற்கு வசதியளிப்பதுடன், கடந்த ஆறு-ஏழு நாட்களாக அவர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பையும் மாநகராட்சிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

மாநகராட்சிப் பள்ளிகளின் மதிய உணவுச் சமையலறையில் உணவு தயாரித்து பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படுகிறது.

பொதுமக்களும், தாங்களாகவே பல உதவிகளைச் செய்ய முன் வந்துள்ளனர்.

பொதுல நிறுவனங்களும், சென்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களும் உதவிபுரிந்து வருகின்றன.

தொடர்ந்து இந்தக் காரியத்தை விரைவு படுத்தவும், ஏழை களுக்கு இதம் கிடைக்கவும் இந்த அரசு ஆவன செய்துவருகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் இந்த அரசு காப்பாற்றத் தவறிவிட்டதாக யாரேனும் கருதுவார்களேயானால், அது, ஏற்கனவே அவர்கள் கொண்டிருந்த எண்ணத்தின் தொடர்பாகும்.

ஏற்கனவே இயற்கைக் கோளாறுகளால்கொடுமைகளுக்கு ஆளாவோருக்கு அரசு கொடுத்துவந்த தொகையைக் கணிசமாக உயர்த்தி—ஒரு குடிசைக்கு ரூ. 40 எனறிருந்ததை ரூ. 80 ஆகத் தர இந்த அரசு முடிவு செய்துவிட்டது. அத்துடன், மாநகராட்சி தரும் ரூ. 25-ஐயும் சேர்த்தால் ரூ. 105 கிடைக்கும். இது மட்டும் போதுமா என்ன போதாது.

நேற்று நடந்த எல்லாக் கட்சியினரும் அடங்கிய குழுவில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதுடன், நிரந்தர பரிகாரத்துக்கான வழி முறைகளைத் தேட வேண்டும் என்றும் எல்லாக் கட்சியினரும் கேட்டுக்கொண்டனர். அந்தக் குழுவில் செய்த முடிவை நான் தெரிவிப்பதற்கு முன்னால் சில வற்றைக் கூற விரும்புகிறேன்.

பீதியடைந்துள்ள குடிசைப் பகுதிகளில் தீவிரமாகவும், பல்வேறு வகையிலும் காவல் புரிந்து வருவோர் தடிகளையும் ஆயுதங்களையும் ஏந்திச் சுற்றிவருகின்ற நேரத்தில், சில விரும்பத்தகாத—வெறுக்கத்தக்க கண்டிக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

முன்னுள் மேலவை உறுப்பினரான திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி தாக்கப்பட்டதாகப் பத்திரிகையிலே வந்த செய்தியறிந்து மிகவும் வருத்தப்பட்டேன்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகட்கு இடம் கொடுப்பவர்கள்மீது யார் எந்த நோக்கம்—எந்தச் சமாதானம் சொன்னாலும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல.

இது குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி போலீசார் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; சிலர் பொறுப்பில் விடுதில் செய்யப்பட்டிருக்கின்றனர். இச் செயலில் ஈடுபட்டிருப்பவர்களைக் கைது செய்யும்படி போலீசாருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

போலீசாரும், பொதுத் தொண்டாற்றுவோரும், பொதுமக்களும், தங்களுக்கு இருக்கும் அளவுகடந்த ஆர்வத்தைத் தவறான வழியில் செலவிட்டுவிடக் கூடாது.

இப்படிப்பட்ட நிலையை வளரவிட்டால், யார்மீதேனும் சந்தேகம் ஏற்பட்டு தாக்குதலில் ஈடுபட்டால், அது பெரிய கலவரத்துக்கு வழிவகுக்கும்.

இதனை, இதழ் நடத்துவோரும் தெளிவாக விளக்கிடவேண்டும்.

பீதியையும் குழப்பங்களையும், சிலர் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதை வளரவிடக் கூடாது. பொறுப்புணர்வுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தீ வைப்போர் யார் என்பதில் பல்வேறு வதந்திகள் பரவுவதால் யாரைப் பார்த்தாலும் சந்தேகம் ஏற்படுகிறது.

பீதிகொண்ட பொதுமக்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்—அத்தகைய தீமைக்கு ஒரு துளியும் இடம் கொடுக்கமாட்டோம்!

இதில் சதித் திட்டம் ஏதேனும் இருந்தால் அதனைக் கண்டுபிடிக்கத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு சுறுசுறுப்பாக வேலை செய்து வருகிறார்.

சதி கண்டுபிடிக்கப்பட்டால், அது உறுதியாக முறியடிக்கப்படும்—சதியில் ஈடுபட்டோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

தொடர்ந்து விபத்து நேராமல் இருக்கும் படி பார்த்துக் கொள்ள அரசு சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது.

காவல்புரிந்து வருவோர் விரும்பத் தகாத செயல்களில் ஈடுபட இந்த அரசு அனுமதிக்காது என்றும் எச்சரிக்கை செய்கிறேன்."

நிரந்தரப் பரிகாரம்

'குடிசைவாழ் மக்களுக்கு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும்' என்று நேற்றைய கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னையில் உள்ள குடிசைகள் எல்லாம் திட்டமிட்டுக் கட்டப்பட்டவையல்ல — வெளியூர்களிலிருந்து வேலை வந்தோரும், புகலிடம் தேடி வந்தோரும் கண்ணுக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் குடிசை அமைத்துக் கொண்டனர். இப்படிப்பட்ட குடிசைப் பகுதிகள், கசரிவு ஏறக்குறைய 600 வரையில் இருக்கின்றன.

இந்தக் குடிசைப் பகுதிகளெல்லாம் திருத்தியமைக்க முற்படுமுன், முதலில், தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை மட்டும் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த இடங்களைத் திருத்தி—திலத்தைச் சமப்படுத்தி—மேலே கூரைகட்டும் பதிலாக 'ஜிங்ஷீட்' அல்லது 'அஸ்பெஸ்டாஸ் ஷீட்' கூரை அமைத்து இனி எளிதில்

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசியின் அளவு 50 சதவிகிதம் குறையும்

இந்த மாதத்தில், மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தரும் அரிசி அளவில் தேவைப்பட்டால் 50 சதவிகிதம்கூட குறைக்கக்கூடும் என்று மத்திய அரசு அறிவித்தது.

இருந்தபோதிலும், இம்மாதத்திற்குத் தேவையான 8,00,000 டன் உணவுத் தானியங்கள், அதிகப்படியாகக் கோதுமை அளிப்பதன் மூலம் சரிக்கட்டக்கூடும்.

அரிசிக் குறைப்பு அளவு, உள் நாட்டுக் கொள்முதல் அரிசி கை விடுப்பைப் பொறுத்திருக்கிறது.

'எல்லோருக்கும் இலவசக் கல்வி' என்று அறிவிக்காதது ஏன்?

தொகை அல்ல — தொக்கி நிற்கும் சமூக நீதியே முக்கியம்!

'இதுதான் நியாயம்' என நல்லோர் ஏற்றுக்கொள்ளுவர்!

எதிர்க் கட்சியினருக்கு அண்ணா தரும் பதில்

தமிழகச் சட்டமன்றத்தில் அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்துக்குப் பதிலளிக்கும்வகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதிகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன; மற்றொரு பகுதி வருமாறு:—

வல்லவர்களாயிற்றே 'வரம்' கொடுப்பதில்!

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் துள்ள சில விவரங்களேப்பற்றி நம்முடைய நண்பர்கள் சொன்னார்கள்.

அதிலே குறிப்பாக, 'நாங்கள் இருந்திருந்தால் என்னென்ன செய்திருப்போம் தெரியுமா?' என்றார்கள்.

அந்தமாதிரி பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை நிச்சயமாக உண்டு. பொதுமக்கள்தான் அதை எண்ணிப்பார்க்காமல் விட்டுவிட்டார்களே தவிர, நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொண்டுதான் இருந்திருப்பீர்கள்.

"நாங்கள் வந்தால் நில வரியை நீக்கியிருப்போம்! புகுமுக வகுப்புக்கு இலவசக் கல்விச் சலுகை அளித்திருப்போம்" என்று கூறுகிறீர்கள்.

நீங்கள் வரம் கொடுப்பதிலே வல்லவர்கள் — கொடுத்த வரத்தைக் கைவிடுவதில் அதைவிட வல்லவர்கள்!

ஆகவே, உங்களுடைய வரத்தை நம்பி பொதுமக்கள் ஏமாந்திருப்பார்கள்; 'ரறுபடியும் ஏமாறக்கூடாது' என்று எண்ணியிருப்பார்கள்.

பொதுமக்கள் கொஞ்சம் விவேகமானவர்கள்—என்ன செய்யலாம்?

செய்ததைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்!

முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், நில வரி சம்பந்தமாக என்ன கருத்தை வைத்துக் கொண்டிருந்தார் என்பது, அவருடைய அறிவிப்பிலே இருந்து தெரிகிறது.

அதைப்போலவே, அவராலே நியமிக்கப்பட்ட தனி அதிகாரி என்ன கருத்திலே அறிக்கை கொடுத்திருக்கின்றார் என்பதை இந்த அரசு பார்த்திருக்கிறது.

"நில வரியை உடனடியாக எல்லா நிலத்திற்கும் ரத்து செயதுவிடவேண்டும்" என்று மட்டுமல்லாமல், 'நிலத்தின் பேரிலே இருக்கின்ற அப்படை வரியை மட்டும் எடுத்து விட்டு, கருக்குப் போடுகின்ற வரியை இன்னும்கூடக் கூட்டிப் போட வேண்டும்' என்று அதிகாரிகளின் அறிக்கையிலே இருக்கிறது.

இவைகளையெல்லாம் பரிசீலிக்கப் போவதாக வாக்களித்திருக்கிறோம்.

ஆகவே, 'நாங்கள் வந்திருந்தால் என்னென்ன செய்திருப்போம்' என்பதையிவ, நீங்கள் இருந்த பொழுது செய்ததைக் கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒன்றைச் செய்துவிட்டு வருத்தமடைய மாட்டேன்!

இப்போது, பத்தாம் வகுப்புவரை—எஸ். எஸ். எல். சி.-வரை—'இலவசப் படிப்பு' என்று கொடுத்திருக்கிறீர்கள். இதை நீங்களே, ஆட்சிக்கு வந்த ஓராண்டியோ செய்து கொடுத்தீர்கள்?—இல்லையே!

எதிர்க் கட்சியில் உள்ளவர்கள், 'கொடுங்கள், கொடுங்கள்' என்று கேட்க — நீங்களோ, 'மெல்ல மெல்லத்தான் என்று சொல்லி — முதலிலே நான்காவது பாரத்தி ற்குக் கொடுத்தீர்கள்; அடுத்த ஆண்டில் 5-வது பரம்பரையிலே இலவசக் கல்வியை அளித்தீர்கள். பிறகு எஸ்.எஸ்.எல்.சி.-வரைக்கும் கொடுத்தீர்கள்.

நீங்கள் அடிமேல் அடி எடுத்து வைக்க, நான் மட்டும் தாவ வேண்டுமா?

"அப்படித் தாவினால், கீழே விழுந்துவிடுவானே — அதைப் பார்க்கலாமே" என்ற எண்ணத்தில்தான் இப்படிக் கூறுகிறீர்கள்.

எண்ணம் பொறுத்தவரையில், பல காரியங்களேச் செய்யாமல் விட்டுவிடுவேனே தவிர, ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, பிறகு 'ஏன் செய்தோம்' என்று வருத்தப்பட்டுக்கொள்ள மாட்டேன்.

சமூக நீதிக்கு அடிப்படை என்ன?

ஆகையால்தான், சர்வ வல்லமை பொருந்திய நீங்கள் எப்படி உயர்நிலேப் பள்ளி வகுப்புக்கு 'ஸ்காலர் ஷிப்' கொடுப்பதிலே கோட்டம் பார்த்து—கணக்குப் பார்த்துச் செய்தீர்களோ, அந்த முறையைக் கையாளுவது எந்த அரசுக்கும் தேவை. அந்தக் கணக்குகேளப் பார்த்து மட்டும் இந்தக் காரியத்தைச் செய்ய விடுவேன்.

அதன் அடிப்படையிலே ஒரு சமூக நீதி அடங்கியிருக்கிறது; அதையும் நிதியில் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

சலுகைகள் செய்யப்பட வேண்டுமென்றும், சமூகாயத்தி லுள்ள எல்லோருக்கும் அந்தச் சலுகை இருக்க வேண்டுமென்பதை சமூக நீதியாக ஒப்புக் கொள்ள மறுக்கிறேன்.

'சமத்துவம் அல்லவா' என்று நீங்கள் வாதாடலாம். காலும் நண்பர் விஜயகுமார் சேர்த்து படிக்கும்போது, 'Equality is not Identity of treatment but the affording of equal opportunities for all' என்று படித்தோம்.

'கங்னுக்குக் கால் படி' என்ருல், 'கருணுநிதிக்குக் கால் படி' என்று அர்த்தம் அல்ல! கருணுநிதி வயிற்றுக்கு அது போதாது!

அதைப்போல் செய்கின்ற சலுகைகள்—அரசுமூலமாக கிடைக்கின்ற சலுகைகள் ஏற்கனவே சமுதாயத்தில் வசதியோடு உள்ளவர்களுக்கும் போய்ச் சேரவேண்டும்.

'அதுதான் சமத்துவம்' என்று யாராவது சொல்லுவார்களானுல், அந்தச் சமத்துவத்தைப் பற்றி அதனுடைய இலக்கணத்தைப்பற்றி மறுபடியும் படிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தச் சமூக நீதியின் அடிப்படையிலேதான், 'எல்லோருக்கும் இலவசக் கல்வி' என்று சொல்லவில்லை; அதற்கு அதிகப் பணம் கூடச் செலவாகவில்லே; '50 இலட்சம் ரூபாய்க்கும் குறைவுதான்' என்று கூறப்படுகிறது.

இதுதான் புரட்சி—இதுதான் புதுமை!

இதில் தொகை அல்ல முக்கியம்—தொக்கியிருக்கிற சமூக நீதி முக்கியம்.

கட்டணம் செலுத்தக்கூடிய வசதியுள்ளவர்கள் கட்டணம் செலுத்த வேண்டும். செலுத்த வசதியில்லாதவர்களுக்குத் தான் சர்க்கார் துணை நிற்க வேண்டும்.

சமூகத்தில் நலிந்தவர்களுக்கும், மெலிந்தவர்களுக்கும் கூட மளித்து வசதியுள்ளவர்கள் தங்களுடைய ஊட்டத்தை தாங்களே பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் வழிவகுக்க வேண்டுமென்ற முறையில்தான், 'பி. யூ. சி. வகுப்பில் ரூ. 1,500-க்கும் அதற்குக் குறைவாகவும் இருப்பவர்களுக்கு கல்வி இலவசமாக இருக்கட்டும்' என்று சொன்னேனும்.

'முற்போக்கு சமூகத்திலேகூட ஏழைகள் இருக்கிறார்கள்' என்பதை இந்த மன்றத்திலேயும், வெளியிலேயும் பலமுறை பேசியிருக்கிறேன்; ஆனுல், நீங்கள் துணிந்து காரியத்தில் செய்ய முன்வரவில்லே! நாங்கள் துணிகரமாக இதைச் செய்திருக்கிறோம்!

'புதுமை இல்லேயா' என்ருல், இது தான் புதுமை!

'புரட்சி இல்லேயா' என்ருல், இது தான் புரட்சி!

'புரட்சி, புரட்சி' என்கிறீர்களே—இதுதான் புரட்சி!

ஏனென்ருல், 'வகுப்புவாதிகள்' என்று தூற்றப்பட்ட நாங்கள், வகுப்புகளுக்கு கவனிக்காமல் ஏழுமையை மட்டும் கவனித்து—எல்லா வகுப்பாரையும் கவனித்து, 'வருவாய் ரூ. 1,500 உள்ளவர்களுக்கு இலவசக் கல்வி' என்று சொன்னேனும்.

இதை எங்களிடத்திலிருந்து யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்; 'வகுப்புவாதிகள்' என்று தூற்றிய காரணத்தால் இதை எதிர்பார்த்திருக்க முடியாது! இது தான் புதுமை! இதுதான் புரட்சி!

புரட்சிக்கு இலக்கணம்—வரையறை என்ன?

'புரட்சி' என்ருல், நம்முடைய கண்பர்கள் ரூல் மாதம் 6-ந்தேதி ஆரம்பித்து — ஆகஸ்டு மாதம் 27-ந்தேதி வரையில் காலம் போட்டு—'நடக்கும்' என்று கருதுகிறார்கள்.

'புரட்சி' என்பது வெடிப்பு! அது எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது!

நடந்து முடிந்த பிறகு எழுதப்பட்ட வரலாறுதான் புரட்சி!

பெரும்பாலான வரலாறு, அதில் சம்பந்தப்பட்டவர்கள் எழுதிய வரலாறுதான்!

இவைகள் எல்லாம் புரட்சி இல்லே யென்ரு கருதுகிறீர்கள்?

புரட்சி என்பதற்காக, 'நாங்கள் வரவு — செலவுத் திட்டத்தை மன்றத்தில் வைக்கப்போவது இல்லே; வாஜெலியே படிக்கப்போகிறோம்' என்ருல், 'பெரிய புரட்சியாக இருக்கிறது' என்று சொல்லலாம்.

வரவு—செலவுத் திட்டத்தை அச்சடித்துக் கொடுக்காமல், 'நில வரி இல்லே; இவ்வளவு விற்பன வரியில்லே, 'வரவு இவ்வளவு; செலவு இவ்வளவு; துண்டு இவ்வளவு; போய்வருகிறீர்களா ?'; என்று சொன்னுல், அதுவும் ஒரு புரட்சிதான்! அப்படிப்பட்ட புரட்சியை என்னிடத்தில் எதிர் பார்க்காமல்விட்டீர்கள்!

இது நாட்டுமக்களுடைய பிரச்சினை 3½ கோடி மக்களுடைய வாழ்வும் தாழ்வும் இந்த 64 பக்கத்தில் அடங்கியிருக்கிறது—நம் முடைய இதயமும் அதிலே கலக்கப்பட்டிருக்கிறது.

நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் இலட்சியங்கள் இதில் அடங்கி இருக்கின்றன.

ஆகையால் புதுமை—புரட்சி என் பதைவிட, பொறுப்பு-அடக்கம் என்பவைகள் அதிகம் இருக்க வேண்டுமென்று நான் கருதினேன்.

நல்லோர்கள், 'இதுதான் நியாயம்' என்று ஏற்றுக்கொள்வார்கள்.

நண்பர்களுக்கு, 'இதுதான் நியாயம்' என்று ஏற்றுக்கொள்வார்கள்.

அவர்களுக்கு இருக்கிற சங்கடம் எல்லாம்-ஒரேயடியாக கோயும் புத்தூர் பாஷையிலே சொன்னுல்—'சொம அடி' கொடுப்பதற்கு இதிலே இடம் இல்லேயே என்பதுதான்!

ஏதாவது குறை கண்டுபிடித்து, 'ஆ; பிடி, பிடி; இது சரியா?' என்று கூறும் நிலே வைக்க வில்லேயே என்று சங்கடப்படுவதை நான் உணருகின்றேன்.

முரண்பாடான நிலைமை—பேச்சில் தடுமாற்றம்!

வரி போடுவதை இவர்கள் எப்படிக் கண்டிக்க முடியும்? மேலே, மொராஜ்ஜி தேசாய் அவர்கள் வரி போட்டிருக்கிருர்! மல்லேக் கடித்துக் கொண்டு என்னேப் பார்த்து எப்படிக் கண்டிக்க முடியும்? இப்போது, 'விற்பனே வரி போடுகிறீர்களே' என்று எப்படிக் கேட்கமுடியும்?

நானுகிலும், கிரோசின்—டீ—காப்பி போன்ற ஏழை மக்களுக்கான பொருள்களிமீது வரி இருக்க வேண்டாமென்று கருதினேன். மொராஜ்ஜி தேசாய் அப்படிக் கருதவில்லே!

'டீக்குக் கூடவா வரி?' என்று கேட்டபோது 'டீ குடிக்காதே' என்ருர் மொராஜ்ஜி தேசாய்!

'சிகரெட்டுக்குக்கூடவா வரி?' என்று கேட்டபோது, 'சிகரெட் பிடிக்காதே—பீடி பிடி' என்ருர்!

அந்தப் பாடத்தை மற்ற நிதி யமைச்சர்களும் எடுத்துக் கொள்வார்கள்! நாங்கள் அப்படி இல்லே!

உங்களுக்கு இருக்கின்ற ஒரு கவுடத்தை நான் உணருகிறேன். ஒரு இடத்திலே நீங்கள் ஆளும் கட்சி—இன்னெரு இடத்திலே நீங்கள் எதிர்க் கட்சி!

முழுவதும் எதிர்க் கட்சி என்ற முறையில் இருக்காமல், உங்களுடைய பேச்சிலே இனிமும் சற்று விழுவிழுப்பு இருந்திருக்கும்!

முழுவதும் ஆளும் கட்சியாக இருந்திருந்தால் அதிகக் கம்பீரம் இருந்திருக்கும்!

இப்படி இருக்குமுடியாத காரணத்தினுல், 'வரி போடுவது தவறு' என்று நீங்களே கூறும்போது, இதைப் பக்கத்தில் உள்ளவர்கள் 'மொராஜ்ஜி தேசாய் போட்டிருக்கிருரே' என்று சுட்டிக் காட்டினுல் என்ன செய்வது என்கிற தயக்கத்தோடுதான் பேசுகிறீர்கள்!

மாண்புமிகு உறுப்பினர் விசாயகம் அவர்களாக இருந்திருந்தால், 'Th t is another matter' என்று சொல்லி தட்டிக் கழித்திருப்பார்!

நண்பர் கருத்திருமன் அவர்கள் இன்னும் கொஞ்சம் பண்பாட்டுடன், 'தவறு எங்கு கடந்தாலும் நான் கண்டிக்கிறேன்; கண்டிக்கத் தயங்கமாட்டேன்' என்று தாகப் பேசியிருப்பார்!

எங்கே கண்டிப்பார்?—இங்கேதான்! அங்கே உள்ளவர்கள் தான் இவர்களுடைய நண்பர்களாயிற்றே!

ஆகையல் இன்றைக்கு எதிர்க் கட்சியில் உள்ள காங்கிரசுக் காரர்களுடைய சங்கடத்தை நான் உணருகிறேன்.

அவர்களும், எதிர்க் கட்சிக்குப் புதியவர்கள்! நாங்களும் ஆளும் கட்சிக்குப் புதியவர்கள்!

நாங்கள் ஆளும் கட்சியிலேயே இருப்பதால், ஒரே விதமான கொள்கையுடன் நடந்து கொண்டுவிட முடியும்; ஆனுல் நீங்களோ, இங்கே எதிர்க் கட்சியில் இருக்கிறீர்கள்—டெல்லியில் ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள்! அதன் காரணமாகப் பேச்சிலே முரண்பாடு ஏற்படுகிறது!

வாதத்தில் வலிவு இல்லே!

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பர் வெளியே பேசுகின்றபோது, 'இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் ஒரே ஒரு படைதான் இருக்கிறது; அது, போலீசுப் படை; ஆனுல், எங்களிடமோ முப்படைகள் இருக்கின்றன; அது, தரைப்படை—கடற்படை—விமானப்படை' என்று பேசினுர்.

நான் அவரது வாதத்தைப் புரிந்து கொள்ளமுடியும். கடந்த இருபது ஆண்டுகளாக எல்லாவிதமான பொறுப்புக்களேயும் வைத்திருந்துவிட்டு, இன்றைக்கு 'ஒன்றுமே இல்லே' என்கிற நிலே ஏற்பட்டுவிட்டபோது, இப்படிப் பேசுகின்ற மனோபாவம்தான் ஏற்படும்.

'நான்தான் பில் கலெக்டரே தவிர, என் அண்ணன் சப்-கலெக்டர்' என்று சொல்லிக்கொள்கின்ற பெருமையைப் போன்ற 'இங்கே எதிர்க் கட்சியாக இருக்கிறேமே தவிர, டெல்லியிலே நாங்கள் ஆளும் கட்சி' என்று சொல்லிக் கொள்ளலாம்.

நான் ஒன்றைச் சொல்வதற்கு வருத்தப்படக்கூடாது. அங்கேயும்கூட நிலேமை சரியாகயில்லே;

(4-ம் பக்கம் பார்க்க)

சேதுசமுத்திரத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை ஏற்படுமா?

அமைச்சர் கருணாநிதி தந்த பதில்

சென்னை, சூலை 6—

"சேதுசமுத்திரத் திட்ட ஆய்வுப் பணிகள் 1965 மே முதல் துவக்கப்பட்டது; 1968 பிப்ரவரிக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இந்தத் திட்டம் நிறைவேறி முடிய ஐந்து ஆண்டுகள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது"

என்று சட்டமன்றத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அறிவித்தார்.

பல துணைக் கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

மண்டபத்திருந்து ஒன்றும், இராமேசுவரத்திலிருந்து ஒன்றுமாக இரண்டு கால்வாய்ப் பாதைகள் பற்றி ஆராயப்பட்டது.

மண்டபத்திலிருந்து துவங்கும் கால்வாய் பாதைக்கு ரூ. 44.5 கோடியும், இராமேசுவரம் கால்வாய்ப் பாதைக்கு ரூ. 35.4 கோடியும் செலவாகும் என மதிப்பிடப்பட்டது.

இராமேசுவரத்திலிருந்து துவங்கும் பாதையே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த மொத்தச் செலவையும் மத்திய அரசே ஏற்கும்—ஏற்கவேண்டும்.

இராமேசுவரத்தில் கடல் அரிப்பைத் தவிர்க்க அரண் அமைக்கப்பட்டுள்ளது; நிரந்தரமான ஏற்பாடு குறித்து ஆலோசிக்கப்படும்.

சேதுசமுத்திரத் திட்டத்தின் தொடக்க ஆய்வுப் பணிகளுக்காக ரூ. 37 இலட்சம் செலவு மதிப்பிடப்பட்டு அதில் ரூ. 12 இலட்சத்தை ஏற்கனவே மத்திய அரசு கொடுத்தது; 1966-67-ல் ரூ. 14 இலட்சம் கொடுக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை"

கே. பி. எஸ். மணி :—"இந்த ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்ற உட்கருத்தைக் கொண்டவர்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்திவருவது அரசுக்குத் தெரியுமா ?

அமைச்சர் :—"அப்படி யாராவது செய்தால், 'அந்த நல்லவர்கள் வாழ்க' என்றுதான் வயிற்றெரிச்சலுடன் கூறவேண்டும்."

★

பூர்வாங்க வேலைகள் மும்முரம்

32 மைல் நீளத்திற்கு சேது சமுத்திரக் கால்வாயை உருவாக்குவதற்காக ஏற்படும் செலவு மற்றும் பிற அம்சங்கள் தொடர்பான பூர்வாங்க வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடியிலிருந்து கோடிக்கரைவரை மன்னார் வளைகுடா வழியாக பால்க் ஜலசந்தியை ஆழப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.

பூர்வாங்க வேலைகள், அடுத்த ஆண்டு பிப்ரவரி வாக்கில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேது சமுத்திரத் திட்டம் பற்றிய தொழில்நுட்ப விவரங்கள், மத்திய அரசின் அபிவிருத்தி ஆலோசனையாளரின் பரிசீலனையில் இருந்துவருகிறது. இத்திட்டத்தை உடனடியாகச் செயலாக்குவதா அல்லது இன்னும் உரிய காலம் வரும்வரை காத்திருப்பதா என்பது குறித்து மத்திய அரசு ஆலோசனை செய்துவருகிறது. இத்திட்டத்தைக் கைவிடும் பேச்சே கிடையாது.

1965 சூன் முதல் சென்னையில் இருந்து செயல்படும் தலைமை எஞ்சினீயர் தலைமையில் தொழில்நுட்ப நிபுணர்கள் குழு, பூர்வாங்க வேலைகளை மேற்கொண்டிருந்தனர். இதற்காக 25 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

இந்தியாவையும் — இலங்கையையும் பிரிக்கும் கடல் வழியில் சீரான முறையில் எல்லை பிரிக்கப்படவில்லை.

இத்திட்டத்திற்கு எவ்வளவு செலவு ஆகும் என்று இப்போது சொல்வதற்கு இல்லை. இத்திட்டம் முடிவடைந்தால், எர்ணாகுளத்திலிருந்து சென்னைக்கு வருகிற கப்பல்கள், இலங்கையைச் சுற்றிக்கொண்டு வராமல், (400 மைல் மிச்சம் பிடித்து) சேது சமுத்திரக் கால்வாய் மூலமாக விரைவில் வந்துவிடலாம்.

படுதோல்விக்குக் காரணம்?

மீரட், சூலை 7—

உத்தரப்பிரதேச மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அதிகாரிகளின் போக்கு காரணமாக எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை.

உத்தரப்பிரதேசத்தில் சில மாவட்டங்களில் அறுவை சிகிச்சை செய்துகொண்ட 900 ஆண்கள் குறித்து 'சர்வே' நடத்தப்பட்டதில், சுமார் 70 சதவீத ஆண்கள் மனைவிகளை இழந்தவர்களாகவோ, பிரம்மச்சாரிகளாகவோ இருக்கிறார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறியளவை வெட்டுவதற்காக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அதிகாரிகள், இவர்களுக்கு ஆபரேஷன்கள் செய்திருக்கிறார்கள்.

இவ்விதம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை கேலிக்கூத்தாக்கியுள்ள அதிகாரிகள் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

2262 பேர் கைது!

கொள்ளை இலாபமடித்தனர்--- கள்ள வணிகம் செய்தனர்

கல்கத்தா, சூலை 6—

"கொள்ளை இலாபமடித்ததாகவும் கள்ளமார்க்கெட் பேரத்தில் ஈடுபட்டதாகவும் மேற்கு வங்கத்தில் கடந்த மார்ச்சுக் குப்பின், 2262 நபர்களை மாநில அரசு கைது செய்திருக்கிறது"

என்று முதலமைச்சர் அஜாய் குமார் முகர்ஜி தெரிவித்தார்.

மேலவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், 'கைதுசெய்யப்பட்ட நபர்களில் இதுவரை 545 பேர் தண்டிக்கப்பட்டனர்' என்றார்.

துணைக் கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில், 'இத்தகைய சமூக விரோத சக்திகள்மீது நடவடிக்கை எடுக்க தடுப்புக்காவல் சட்டப் பிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன' என்று சொன்னார்.

ரூ. 4,797 கோடி கடன்பெற்ற இந்தியா!

இவ்வாண்டில் மட்டும் ரூ. 141 கோடி வட்டி செலுத்தும்

புதுடில்லி, சூலை 6—

"இவ்வாண்டு மார்ச் 31-ஆம் நாள்வரை, வெளிநாடுகளில் இந்தியா வாங்கியிருக்கும் கடன், 2017-ஆம் ஆண்டுக்குள் கொடுத்து முடிக்கப்படும்"

என்று நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய், நாடாளுமன்றத்தில் கூறினார்.

மார்ச் 31-ஆம் நாள்வரை இந்தியா பெற்றிருக்கும் மொத்தக் கடன் ரூ. 4,797.77 கோடியாகும்.

1967—68-ல் அசல் தொகையில் ரூ. 167.49 கோடி திருப்பிக் கொடுக்கப்படும்; வட்டியாக ரூ. 141.47 கோடி கொடுக்கப்படும்.

வேலூருக்கு அரசு பஸ்

சென்னை, சூலை 6—

"சென்னை – வேலூருக்கிடையே வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் அரசு பஸ் விடுவதை மாற்றி நாள்தோறும் பஸ்விட ஏற்பாடு செய்யப்படுமா ?"

என்று, சட்டமன்றத்தில் திரு. எஸ். ஜே. இராமசாமி கேட்டதற்கு, 'உடனடியாக விடுவதற்கான உத்தேசம் இல்லை' என்று பொதுப் பணித்துறை அமைச்சர் பதிலளித்தார்.

மேலும் துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது :—

"அரசின் புதிய கொள்கைக் கேற்ப 75 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட வழித்தடங்களை அரசே மேற்கொள்ள இருப்பதையொட்டி விரைவிலேயே வேறு ஒரு பஸ் வழித்தடங்கள் அரசுக்குக் கிடைக்கக்கூடும். இப்போது சனி—ஞாயிறு—திங்கள் ஆகிய கிழமைகளில் சென்னையிலிருந்து 3 பஸ்களும் வேலூரிலிருந்து 3 பஸ்களும் விடப்படுகின்றன. அரசு விடுமுறையான இரண்டாம் சனிக் கிழமை வரும் வாரத்தில் வெள்ளிக் கிழமையும் பஸ் விடப்படுகிறது. நாள்தோறும் விடவேண்டுமானால் அதற்குரிய அனுமதியை அரசு பெற்றாக வேண்டும். எனவே, 9—12—67-ல் வேறொரு பஸ் வழித்தடம் நமக்குக் கிடைக்க இருக்கிறது. அப்போது நாள்தோறும் பஸ் விட வழி ஏற்படும்.

"இப்போது வேலூருக்குச் சென்று வரும் பஸ்கள் மூலம் ஒரு நாளைக்கு ரூ. 2,850 வசூலாகிறது.

நீலகிரியும் ஏலகிரியும்!

சென்னை, சூலை 6—

"வ. ஆ. மாவட்டத்தில் ஏலகிரி மலையிலும், சாத்தனூர் அணை அருகிலும் பயணிகள் மாளிகை கட்டும் உத்தேசம் தற்போது இல்லை"

என்று அமைச்சர் திருமதி சத்திய வாணிமுத்து, சட்டமன்றத்தில், திரு. வி. கே. கோதண்டராமன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

எஸ். ஜே. இராமசாமி :—"தமிழ் நாட்டுக்கு நீலகிரிபோல் வட ஆற்காடு மாவட்டத்துக்கு ஏலகிரி இருப்பதால் அங்கே பயணிகள் வந்து தங்க அரசு வசதிகளைச் செய்து கொடுக்குமா ?"

அண்ணா :—"கனம் உறுப்பினர் அவர்கள், 'நீலகிரியைப் போன்றது ஏலகிரி' என்பதை முதலில் மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்யட்டும்: அதன் பிறகு மக்கள் அங்கு வரத் துவங்கினால் வசதி செய்வது பற்றி கவனிக்கலாம்."

கிராமங்களில் மருத்துவ வசதி

உடனடி நடவடிக்கை அரசு மேற்கொள்ளும்

சட்டமன்றத்தில் அமைச்சர் சாதிக் பாட்சா உறுதிமொழி

சென்னை, சூலை 6—

"மருத்துவ வசதிகளுக்காகத் தற்போது அரசு செலவழிக்கும் பணம் (சுமார் ரூ. 12 கோடி) போதாது; குறைந்தது அதைப் போல் இரு மடங்குத் தொகையை ஒதுக்கவேண்டும் என்பது தான் அரசின் நோக்கமாகும். ஆனால், போதிய நிதி வசதி இல்லாமையால் அரசு விரும்புகின்ற அளவில் இத்துறையை விரிவுபடுத்த இயலவில்லை"

என்று சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, சட்டமன்றத்தில், சுகாதார மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெளிவுபடுத்தினார். அவர் மேலும் கூறியதாவது :—

"கிராமங்களில் அதிக அளவில் மருத்துவ வசதிகளை அதிகரிக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

சென்னை ஜெனரல் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம், பரிசீலனைகளில் இருந்து வருகிறது; விரைவில் விரிவுபடுத்தும் திட்டங்களை மேற்கொள்ள அரசு, நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்.

கிராமப் புறங்களில் உள்ள மருத்துவமனைகளில், 'டாக்டரும் இல்லை—மருந்தும் இல்லை' என்ற நிலைமை இருந்ததற்குக் காரணம் போதுமான பயிற்சி பெற்ற டாக்டர்கள் கிடைக்காததே ஆகும். இந்த அரசாங்கம் பதவி ஏற்றவுடன், இதுபோன்ற நிலைமையைப் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

அப்படியும் எங்கேனும் இது போன்ற நிலைமை (டாக்டரும் இல்லை—மருந்தும் இல்லை என்ற நிலைமை) இருப்பதை உறுப்பினர்கள் தெரிவித்தால் 'அரசு உடனே உரிய நடவடிக்கை எடுக்கும்' என உறுதி கூறுகிறேன்.

கலப்படம் செய்பவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க மத்திய அரசின் இப்போதைய கலப்படச் சட்டமே போதுமானதாக இருக்கிறது; எனவே புதிய சட்டம் ஏதும் தேவையில்லை."

தாலுகா போர்டு ஏற்படாது

சென்னை, சூலை 6—

"இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிப்புக்களை எடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக தாலுகா போர்டுகளையோ மாவட்ட போர்டுகளையோ ஏற்படுத்தும் எண்ணம் எதுவுமில்லை"

என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், கே. வினாயகம் கேள்விக்குப் பதிலளித்தார்.

உணவுத் தானியங்கள் பதுக்கல் -- கடத்தல்

விழிப்புக் குழு கண்டுபிடிப்பு

சென்னை, சூலை 6—

உணவுத் தானியங்களைப் பதுக்கி வைத்திருந்ததாகவும், கள்ளக் கடத்தல் செய்ததாகவும் விழிப்புக் குழுவினர், கடந்த சூன் மாதத்தில் 348 வழக்குகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இவைகளில் 65 பதுக்கல் வழக்குகளும், 283 கடத்தல் வழக்குகளுமாகும்.

இப்படிக் கைப்பற்றிய வகையில் ரூ. 4,65,979 மதிப்புள்ள 2,750.85 குவிண்டால் அரிசியும், 2,946.06 குவிண்டால் தானியங்களும் கிடைத்தன.

மார்ச் 6-ம் நாளிலிருந்து சூன் 30-ம் நாள்வரை விழிப்புக் குழுவினர் கைப்பற்றிய மொத்த உணவுத் தானியங்களின் மதிப்பு ரூ. 19,56,824 ஆகும்.

வேலைநிறுத்த காலத்தில் அமைதி காக்கப்பட்டது

சென்னை, சூலை 5—

இந்த ஆண்டில் பற்பல சமயங்களில் பல்வேறு காரணங்களுக்காகத் தொழிலாளர்கள் பன்முறை வேலைநிறுத்தம் செய்தனர். இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் நிலைமை கட்டுக்கு மீறிவிடாமல் பார்த்துக் கொண்டு தொழில்துறை சமரச அதிகாரிகள் ஒத்துழைப்புடன் தொழில் துறையில் போலீசு அமைதியை நிலைநாட்டியது.

செஞ்சி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக் கூடம்

திட்டம் தள்ளிவைப்பு

சென்னை, சூலை 6—

"செஞ்சியிலுள்ள அரசினர் மருத்துவ நிலையத்தில் அறுவைச் சிகிச்சைக்கூடம் அமைக்கும் ஏற்பாடு, நிதி நிலை காரணமாகத் தள்ளிப்போடப்பட்டிருக்கிறது"

என்று, மருத்துவத்துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா, சட்டமன்றத்தில், திரு. முனுசாமி கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

நகராட்சி மன்றங்களில் தமிழ்

ஆட்சி மொழியாக்க அரசு ஆணை

சென்னை, சூலை 6—

நகராட்சி மன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடத்துவதற்கான புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழை ஆட்சி மொழியாக மேற்கொள்வதற்கெனத் துணை விதிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்றும், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எம். முத்துசாமி இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் 73 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் 15 இடங்கள்தான் பாக்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

அரசு பரிந்துரைத்துள்ள துணை விதிகளாவன :—

தமிழ் மொழி இந்த நகராட்சி மத்றத்தின் நகர்ப் பகுதிக் குழுவின் ஆட்சி மொழியாகும். இது முதற்கொண்டு இந்த அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் எல்லா கடிதங்களும் தமிழிலேயே இருக்கும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஆங்கிலம் பயன்படுத்தப்படும் :—

சம்பளப் பட்டிகள், பயிற்சி உதவிம் பணப் பட்டிகள், சில்லறைச் செலவுப் பட்டிகள், பயணப் படி பட்டிகள் ஆகியவற்றைத் தயாரித்தல், மற்றும் கருவூலங்கள், சென்னையிலுள்ள தல நிதித் தணிக்கைத் துறைத் தலைமை ஆராய்வாளர், சென்னையிலுள்ள அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பப்படும் கடிதங்கள்.

அரசாங்கத் துறைகளின் தலைவர்கள்—மாநில அரசு—கிராம நீதி மன்றங்கள் நீங்கலாக ஏனைய நீதி மன்றங்கள், மத்திய அரசின் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பும் கடிதங்கள்.

மேல் முறையீடு அல்லது மறு பரிசீலனைக்குட்பட்ட சட்டப்படியான ஆணைகள் அனைத்தும்.

ஒரே மாதத்தில் போக்குவரத்துப் படி ரூ. 6.60 லட்சம்

காங்கிரசு அமைச்சர்கள் பெற்றதாக அறிவிப்பு

பாட்னா, சூலை 6—

"பீகார் மாநிலத்தில் பதவியிலிருந்த முந்தைய காங்கிரசு அமைச்சர்கள் ஒரே மாதத்தில் ரூ. 6.60 இலட்சம் போக்குவரத்துப் படியாக மட்டும் பெற்றிருக்கின்றனர்"

என்று பீகார் மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் துணை நிதியமைச்சர் சபாபதி சிங் கூறியுள்ளார்.

அண்ணா பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மத்திய அரசில் காங்கிரசுக் கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறதே தவிர, முன்பு நண்பர் கருத்திருமன் அங்கே இருந்தபோது அவர்களுக்கு இருந்த பலம் இன்றைக்கு இல்லை!

எதிர்க் கட்சிகளுக்கும்—ஆளும் கட்சிக்கும் உள்ள இடைவெளியில் 50-பேர்களேதான் இருக்கிறார்கள். 50 ஓட்டு வித்தியாசத்தில்தான் இன்றைக்கு மத்திய அரசு இருக்கிறது.

யாராவது ஒருவருக்குத் துணை அமைச்சர் பதவி கிடைக்காத சோக நிலை வந்தால்—வரவேண்டாம்—வந்தால்—தான் கேட்ட ஒன்றைச் செய்யத் தவறினால்—இந்த 50 என்ற அளவு எவ்வளவு வேகமாகக் குறையும்—எப்படி எப்படி மாறும் என்பதை இராஜஸ்தானிலும், பஞ்சாபிலும், வேறு மாநிலங்களிலும்—சொக்கட்டான் காய்கள் மாறி உட்காருவதைப்போல் உறுப்பினர்கள் உட்கார்ந்த நிலையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

நிலைமை என்ன என்பதை உணருங்கள்!

அரசியல் ஆய்வாளர்கள், 'தலைமையமைச்சர் இந்திரா காந்தியைப் போன்ற சிறந்த இராசதந்திரியினால்தான் இன்று உள்ள மத்திய அரசின் நிலை நீடிக்கலாமே தவிர — இல்லையென்றால்—ஓராண்டுக் காலத்திற்குள் இந்த நிலை சரிந்து விடும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

என் சொந்த விருப்பம், 'அங்குள்ள நிலை மாற்றப்படக் கூடாது' எனக் கருதுகிறேன். அதைக் கவிழ்த்து விடவேண்டுமென்று எதுவும் சொல்லவில்லை; காரணம், நாங்கள் அங்குள்ளவர்களை மதித்து அரசியலில் நுழைந்திருக்கிறோம்.

நீங்கள் எங்களை மதிக்காமல் அரசியலில் நுழைந்தவர்கள்; அதனால்தான், மத்தியில் நீங்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும், உங்கள் நிலைமை என்ன என்பதை உணர வேண்டுகிறேன்.

முன்னர் பாராளுமன்றத்தில் நீங்கள் ஒரு 'தீர்மானம்' கொண்டு வந்து, 'I move this' என்று சொன்னால், 'carried' என்று எதிரொலிக்கின்ற அளவுக்கு வலிவு இருந்தது.

ஆனால் இன்றைக்கு, 'This is not the time to move it' என்ற அளவில் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பே விதிமுறைகளை விவாதிப்பதில் இரண்டுமணி நேரம் ஆகிறது!

ஆக, அங்கும் சங்கடமான நிலைமைதான் இருக்கிறது—நான் அனுதாபப்படுகிறேன் — பரிவு காட்டுகிறேன்.

அந்த எண்ணம் எங்களுக்கு இல்லை!

கொஞ்சம் அதிகமான விவரம் இல்லாதவர்கள், 'எங்களிடம் முப்படை இருக்கிறது' என்று பேசிவிடலாம்.

இன்றைக்கு அவர்களிடம் என்னென்ன படைகள் எல்லாம் வந்திருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும்.

உண்மையைச் சொல்லப் போனால், நான் இன்றைக்கு மத்திய சர்க்காரோடு குறுக்கிடத் தயாராக இல்லை. இந்த அரசு மத்திய அரசோடு மோதிக்கொண்டே தீர வேண்டுமென்ற எண்ணத்தில் இல்லவே இல்லை!" (தொடரும்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-10 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

அண்ணா தெளிவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தீப் பிடிக்க முடியாதபடி—அப்படித் தீப் பிடித்தாலும் அதிகச் சேதம் ஏற்படாதபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள குடிசைகள் 80,000 முதல் ஓர் இலட்சம் வரை இருக்கும் என்று இப்போது மதிப்பிடப்படுகிறது. இவை அத்தனையையும் திருத்தி அமைக்க 4—5 ஆண்டுகள் பிடிக்கும்.

எனவே, இப்போது பொதுமக்கள் ஆதரவுடன், பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை மட்டும் திருத்தியமைக்க ரூ. 5 இலட்சம் வரையில் செலவு ஏற்படும் எனக் கணக்கிடப்படுகிறது.

ஒரு குடிசைக்கு ரூ. 400 முதல் ரூ. 450-வரை செலவாகுமென நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அரசும், மாநகராட்சியும் சேர்ந்து கொடுக்கும் தொகை ரூ. 105; மீதிப் பணத்தைப் பொதுமக்களும், பொதுநலத்தில் அக்கறை கொண்டோரும், தொழிலதிபர்களும், தொழிலாளத் தோழர்களும் கொடுத்துதவ முன்வர வேண்டும். பலர் இப்போதே முன்வந்து பணமும் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே ரூ. 2 இலட்சம் வரை முதலமைச்சர் நிதிக்குச் சேர்ந்திருக்கிறது. மேலும் கொடுத்திருக்கும் பட்டியலை வாசிக்கிறேன். (பட்டியல் விவரம் பின்னர்).

இப்படிப்பட்ட பழைய குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் நேரத்தில் வேறு பக்கத்திலே புதிது புதிதாகக் குடிசைகள் தோன்றாதவாறு பொதுமக்களும், அரசியல் கட்சியினரும், மாநகராட்சி—சட்டமன்ற உறுப்பினர்களும் பார்த்துக்கொள்ள வேண்டும்."

பாதிக்கப்பட்டோருக்கு நல்வாழ்வு

தலைமையமைச்சர் நிதியிலிருந்து உதவி

சென்னை, சூலை 7—

சென்னை நகரில் தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வளிப்பதற்கு தலைமை அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, உதவியளிக்கக் கோரி அறிஞர் அண்ணா அவர்கள், சட்ட அமைச்சர் செ. மாதவன் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்திற்குப் பலன் கிட்டியிருக்கிறது.

அண்ணா அனுப்பியக் கடிதத்தை தலைமை அமைச்சரிடம் கொடுத்து, அமைச்சர் செ. மாதவன் சென்னை நகரில் ஏற்பட்ட தீ விபத்துக்களைப் பற்றி விளக்கிக் கூறினார்.

தலைமையமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 50,000 வழங்க தலைமையமைச்சர் ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

தலைமையமைச்சர்--- தமிழக அமைச்சர்கள் சந்திப்பு

புதுடில்லி, சூலை 7—

தமிழக அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், செ. மாதவன், ஏ. கோவிந்தசாமி ஆகியோர் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்து, வரும் ஐந்தாண்டுகளில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக தமிழக அரசு வகுத்துள்ள ரூ. 100 கோடி திட்டத்தை அமுல்படுத்த மத்திய அரசு உதவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இந்த ஆண்டுக்கு மட்டும அவர்கள் ரூ. 20 கோடி கேட்டனர்.

அமைச்சர்களுடன் நாடாளுமன்றக் கழக உறுப்பினர் க. இராசாராம் பி.ஏ. அவர்களும் சென்றிருந்தார்.

அமைச்சர்களின் கோரிக்கையை ஆய்வதாக தலைமையமைச்சர் உறுதியளித்தார்.

தீ விபத்து நிதி வசூல்

சூலை 14, 15 நாட்களில் எம். ஜி. ஆர். கலந்துகொள்வார்

"தீ விபத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறும் குடிசைவாழ் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதற்காக நடைபெற இருந்த புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். கலந்துகொள்ளும் உண்டியல் ஏந்தி வரும் ஊர்வல நிகழ்ச்சி, இம்மாதம் 14, 15-ம் நாட்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிதது.

"தொழிலாளத் தோழர்களும் தொண்டர்களும் பாதுகாப்புப் பணியிலும், வீடிழந்தவர்கட்கு இடவசதி — உணவு வசதி ஆகியவற்றைச் செய்து கொடுக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டு உண்டியல் ஏந்தி வரும் நிகழ்ச்சி மேற்கண்ட தேதிகளில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

"ஊர்வலம் புறப்படும் நேரம் —ஊர்வலம் வரும் தெருக்கள் ஆகியவை பின்னர் அறிவிக்கப்படும்."

நீலநாராயணன்
சென்னை மாவட்ட தி.மு.க.
செயலாளா,

'கூடுதல் சுமையைச் சமாளிக்க இயலாது'

பஞ்சப் படி உயர்வுக்கு முதல்வர்கள் எதிர்ப்பு

புதுடில்லி, சூலை 7—

கசேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப் படியை மேலும் உயர்த்துவதை மாநில முதலமைச்சர்கள் எதிர்த்ததாகத் தெரிகிறது.

"இப்பொழுதுள்ள மோசமான நிலைமையில் விலை உயர்வுக்கு ஏற்ப ஊதியம் அதிகமானவுடன் விலைவாசி உயர்கிறது" என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஆகவே, மத்திய அரசு பஞ்சப் படியை உயர்த்தாமல் விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விரும்பினர்.

"கசேந்திர கட்கர் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றால், அதே அளவு பஞ்சப் படியை தங்கள் ஊழியர்களுக்குத் தராமலிருப்பது, மாநில அரசுகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கும்" என்று முதலமைச்சர்கள் கூறினார்கள்.

"மாநில அரசு ஊழியர்களின் பஞ்சப் படியை உயர்த்த மத்திய அரசு உதவி தருவதென்பது அவ்வளவு சுலபமல்ல" என்று முதலமைச்சர்களிடம் மொரார்ஜி தேசாய் கூறினார்.

"பஞ்சப் படிக் குழுவின் பரிந்துரையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் மத்திய அரசுக்கு ரூ. 60 கோடியும், மாநில அரசுகளுக்கு ரூ. 120 கோடியும், இரயில்வேக்கு ரூ. 2 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ. 10 கோடியும் செலவாகும். இந்தப் பணமெல்லாம் எங்கே இருக்கிறது?" என்று ஒரு முதலமைச்சர் கேட்டார்.

"கூடுதல் சுமையைச் சமாளிக்க முடியாது" என. எல்லா முதலமைச்சர்களும் கருதினார்கள்.

திருத்தம்

சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன்மீது திரு. ஹண்டே, 'நவசக்தி' இதழ் செய்தியையொட்டிக் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை பற்றிய செய்தி, நேற்றைய 'நம் நாடு' இதழின் சில பிரதிகளில், 'நவசக்தி'மீது உரிமைப் பிரச்சினை என்று தவறாக அச்சாகி விட்டது; உடன் தவறு திருத்தப்பட்டுவிட்டது. இந்தத் தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

14 இலட்சம் போலி உணவுப் பங்கீட்டு அட்டைகள்!

பாட்னா, சூலை 7—

பீகாரின் தலைநகரான பாட்னாவில், மக்கள் எண்ணிக்கையின் படி, 10 இலட்சம் உணவுப் பங்கீட்டு அட்டைகள் இருக்க வேண்டுமென்றும், ஆனால் 14 இலட்சம் அட்டைகள் நடைமுறையில் இருப்பதாகவும், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்கு எழுத்து மூலம், உணவு அமைச்சர் கபில்தேவ் சிங் (ச. சோ.) பதிலளித்துள்ளார்.

சென்ற வாரத்தில் 26,000 போலிப் பங்கீட்டு அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், சென்ற ஆண்டில் 3 இலட்சம் அட்டைகள் நீக்கப்பட்டதாகவும், சென்ற மாதத்தில் 4,000 நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

நிவாரண நடவடிக்கை-- சட்டமன்ற அனைத்துக் கட்சிக் குழு ஆலோசனை

சென்னை, சூலை 8—

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட சென்னை நகர குடிசைவாழ் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிவாரண உதவி குறித்து அரசுக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்ட சட்டமன்ற அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டம், முதலமைச்சர் அண்ணா தலைமையில்—அவரது அறையில் நேற்று பிற்பகல் நடந்தது. எல்லா உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் மாநில அரசு சார்பில் ரூ. 80-ம் —மாநகராட்சி சார்பில் ரூ. 25-ம் வழங்கப்படுவதோடு, வசூலாகிவரும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எளிதில் தீப்பிடிக்காத கூரைகளோடு கூடிய செட்டுகளை அமைத்துத் தர வேண்டுமென்றும் குழு உறுப்பினர்களில் பலர் அரசுக்கு ஆலோசனை கூறினர்.

கா. காளிமுத்து

சுற்றுப்பயணம்

சூலை 9: விளாங்குடி; 16: சிவகாசி; 23: திருவில்லிப்புத்தூர்.

முகவரி:—கா. காளிமுத்து, விரிவுரையாளர், வி. டி. சி. தனிப் பயிற்சிக் கல்லூரி, மதுரை-1.

MADRAS STATE ELECTRICITY BOARD

RE-AUCTION NOTICE

One number condemned Chevrolet Lorry 1945 Model bearing registration number MDN 4269, will be sold in Public Re-auction at the Transport Overseer Yard, Mettupalayam near Railway siding on 19—7—67 at 12 Noon. The vehicle may be inspected at the above place on any working day during office hours.

The condition of auction sale and details of the Lorry can be had free of cost on requisition from the Office of the Superintending Engineer, Parsons Valley Circle, Emerald Camp Post, The Nilgiris.

SUPERINTENDING ENGINEER,
Parsons Valley Circle
EMERALD CAMP

நடக்க இருப்பவை

9--7--67

அந்தியூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: ஈ. எஸ். பெரியசாமி; பேசுவோர்: மு. தமீம், க. அன்பரசு, அ. க. துரைராசு, ஏ.ஆர். கோவிந்தசாமி.

10--7--67

சின்னம்பேடு

தி. மு. க. சார்பில் பி. சிவசங்கரன் எம்.பி., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., பா. நாகலிங்கம் எம். எல். ஏ. ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு; தலைவர்; எம். ஆர். முருகேசன்; பேசுவோர்: அறிஞர் அண்ணா, அமைச்சர் முத்துசாமி, ஆ. கிருஷ்ணன் பி.ஏ., மு. கேசவன், பா. மு. சுப்பிரமணியம்.

161-நெ. வளத்தூர்

தி. மு. க. துவக்கவிழா; மாலை 6-மணிக்கு; தலைவர்: கா. எத்திராசன்; கொடியேற்றுபவர்: டி. சீனுவாசன்; திறப்பாளர்: நா. கிருஷ்ணன் எம். ஏ. பி. எல்., எம்.எல்.ஏ., பேசுவோர்: அறிவுடைநம்பி, எம். எஸ். இளங்கோ எம்.சி., சி. ஆறுமுகம், ஏ. சுப்பிரமணியம், ஆர். பாலகிருஷ்ணன், எஸ். கிருட்டிணமூர்த்தி.

பொன்னேரி வட்டத்தில் முதலமைச்சர் அண்ணா

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

10—7—67

மாலை 5 மணி: சோழவரம் உயர் நிலைப் பள்ளித் திறப்புவிழா
5-30 மணி: சோழவரம் கால்நடை மருத்துவநிலையத் திறப்பு
6 மணி: கிளைக் கழக வரவேற்பு
6-30 மணி: புதுவாயில் மனமகிழ் மன்றத் திறப்பு
7 மணி: சின்னம்பேடு அகரம் துவக்கப் பள்ளித் திறப்பு
7-30 மணி: ஊராட்சி வரவேற்பு
8 மணி: பொதுக்கூட்டம்

(அமைச்சர் முத்துசாமி அவர்களும் கலந்துகொள்வார்கள்)

உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

9—7—67

காலை 7-30 மணி: உத்திரமேரூர்—திருமணம்
9-30 மணி: கண்டமானடி—திருமணம்
12 மணி: சேர்ந்தனூர் — பள்ளிக் கட்டிடத் திறப்பு
மாலை 3 மணி: கண்டமானடி ஊராட்சி வரவேற்பு
மாலை 4 மணி, விவசாயிகள் பாங்கி வரவேற்பு
மாலை 5 மணி: கோலியனூர் ஒன்றிப்பு வரவேற்பு